# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



அனுப்புநர் :

ந.கி.சந்திரசேகர், B.E., M.T.P.,
துணை இயக்குநர்(பொ/உறுப்பினர் செயலர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
எண்.331/95, கோட்ராம்பாளையம் தெரு,
(Old Employment Office)
இரங்கசாமிகுளம் அருகில்,
காஞ்சிபுரம்- 631 501.
ddkanchidtcp@gmail.com.
தொலைப்பேசி எண்:044-27227937.

பெறுநர் :

தனி அலுவலர்/
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
புத்தேரி ஊராட்சி,
காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம்,
சிறுகாவேரிபாக்கம் (இருப்பு),
காஞ்சிபுரம் மாவட்டம்.

ந.க.எண்.984/2020 கா.மா-3: நாள்: .10.2021

அய்யா,

பொருள்: மனைப்பிரிவு – மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், காஞ்சிபுரம் மாவட்டம்/வட்டம் - காஞ்சிபுரம் உள்ளூர் திட்டக் குழுமம், காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், புத்தேரி ஊராட்சி/ கிராமம் - சர்வே எண்.114-ல் 1.61 ஏக்கர் பரப்பளவு மனையிடத்தில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1. மனுதாரர் திரு.R.அப்துல் ஹக்கிம், அவர்களின் கடிதம் நாள்:29.03.2019.
2. நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 14619/88/பிசி நாள்:27.04.1988
3. நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 40483/1990/எல்ஏ1 நாள்:7.11.1992
4. நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 16985/2000/எல்ஏ2 நாள்:29.09.2007
5. அரசாணை எண். 71, ஊரக வளர்ச்சித் துறை நாள் : 16.06.2003
6. அரசாணை எண். 138, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள் :04.06.2004
7. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 12544/14/சிபி, நாள்:04.07.14.
8. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 16091/2016/M1 நாள்:11.05.17
9. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 13686/2017/எல்ஏ1 நாள் : 08.09.17
10. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 7978/2012/எல்ஏ2. நாள் : 19.04.12
11. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.12201/2017/சிபி, நாள்.22.09.2017.
12. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 04.02.2019.
13. அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 31.01.2020
14. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள்.21.11.2020(சாலை, பொதுஉபயோகம், மின்வாரியத்திற்கான பகுதி மற்றும் மூலைமுடக்கு பகுதிகளை ஒப்படைக்கக் கோரியது)

15. தனி அலுவலர், வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), அவர்களின் கடிதம் ந.க.எண்.4150/2021/அ7, நாள்:06.09.2021 (தீர்மானம் நாள்.06.09.2021, தானபத்திரம் எண்.4293/2021, நாள்.09.08.2021.) 53
16. சார்பதிவாளர், 2 எண் இணை சார்பதிவகம், காஞ்சிபுரம் அவர்களின் கடிதம் ந.க.எண்.376/2021, நாள்.24.09.2021.
17. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள்.05.10.2021. (கூராய்வு கட்டணம், நன்னிலை வரி, வளர்ச்சிக் கட்டணம், Display Board Deposit, Armed Force Flag day fund கட்டணம் (ம) OSR கட்டணம் ஆகியவை செலுத்தக்கோரப்பட்டது)
18. மனுதாரர், திரு.R.அப்துல் ஹக்கிம், அவர்களின் கடிதம் (ம) இணைப்புகள் நாள்.07.10.2021(கூராய்வு கட்டணம், நன்னிலை வரி, வளர்ச்சிக் கட்டணம், Display Board Deposit, Armed Force Flag day fund கட்டணம் (ம) OSR கட்டணம் ஆகியவை செலுத்தப்பட்டது)
19 நகர் ஊரமைப்பு ஆணையர் சுற்றறிக்கை கடிதம் எண். 9860/10/முதி1 நாள்:20.9.16-ன்படி Online Application No.202001301018685, நாள்.30.10.2020.

---

காஞ்சிபுரம் மாவட்டம் / வட்டம், காஞ்சிபுரம் உள்ளூர் திட்டக் குழுமம், காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், புத்தேரி ஊராட்சி/ கிராமம், சர்வே எண்.114-ல் 1.61 ஏக்கர்பரப்பு மனையிடத்தில் அமையும் உத்தேச மனைப்பிரிவுக்கு பார்வை 1-ல் சுட்டிய கடிதத்துடன் பெறப்பட்ட மனைப்பிரிவு உத்தேசம் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட உத்தரவு வழங்கப்படுகிறது.

பார்வை 15-ல் காணும் கடிதம் மூலம் சாலை மற்றும் பொது உபயோக பகுதிகளை உள்ளாட்சி அவர்களுக்கும் ஒப்படைப்பு செய்யப்பட்டதற்கான தானப்பத்திர நகல் சான்றொப்பமிட்டு பெறப்பட்டுள்ளது. மேலும் அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் பார்வை 17-ல் கண்ட இவ்வலுவலக கடிதங்கள் மூலம் கோரப்பட்டு, பார்வை 18-ல் கண்ட மனுதாரரின் கடிதம் மூலம் அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய கூராய்வு கட்டணம் **ரூ.10,000/-**, நன்னிலை வரி ரூ.12,000/-, அபிவிருத்தி கட்டணம் **ரூ.33,000/-**, **Display board deposit ரூ.10,000/-**, **Armed Force Flag Day Fund ரூ.2500/- (ம) OSR கட்டணம் ரூ.1,61,500/-** செலுத்தப்பட்டதற்கான விவரம் பெறப்பட்டுள்ளது.

இம்மனைப்பிரிவிற்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுடன் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்டமனைப்பிரிவு வரைபடத்திற்கு **மவ/காஉதிகு எண்.19/2021** என எண்ணிடப்பட்டும் தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடத்திற்கு **திட்ட அனுமதி காஉதிகு எண்.17/2021** என எண்ணிடப்பட்டும் இரண்டு தொகுப்புகள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது.

மேலும் பார்வை 2 முதல் 13 வரை சுட்டிய அரசாணைகள் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் கடிதங்களில் தெரிவித்துள்ளபடி, தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பார்வை 2-ல் சுட்டியுள்ள அரசாணையின்படி சாலைகளை மனுதாரரிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெற்றும், சாலைகள், குடிநீர், தெரு விளக்குகள் மற்றும் வடிகால் வசதிகளை செய்து மனைப்பிரிவு முழுமையாக அபிவிருத்தி செய்து அதனை உள்ளாட்சிக்கு ஒப்படைத்த பின்னரும், மேலும் மேற்கண்ட அரசாணையில் கண்டுள்ள இதர நடைமுறைகளை பின்பற்றியும் மன்றத்தின் அனுமதி பெற்றும், இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படவேண்டும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள

மனைப்பிரிவு நிபந்தனை 19(இ), 19(உ) குறித்து உறுதி செய்த பின்னரே ஒப்புதல் வழங்கப்படவேண்டும் என்றும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மனைப்பிரிவிற்கு தனி அலுவலர், வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), அவர்களின் அவர்களின் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.19(ஈ)-ன்படி இவ்வுத்தரவின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

The Land Ownership is the responsibility of the local Authority, as per the G.O.Ms No.134, MAWS dated:20.09.2002. and this technical approval for the layout is accorded based on the land ownership certificate furnished by the executive authority.

பார்வை 15-ல் கண்ட கடிதம் மூலம் பெறப்பட்ட இணைப்புகளில் உள்ளவாறு தனி அலுவலர், வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மனைப்பிரிவு சாலைகள் இடத்தினை தனி புலஉட்பிரிவு பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

உத்தேச மனைப்பிரிவில் அமையும் மனைப்பிரிவு சாலைகள் தனி அலுவலர், வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் அவர்களுக்கு தெரிவிக்கப்படும் சாலையின் அகலம், அதன் உயரம் மற்றும் தரத்திற்கு அமைக்கப்பட்டுள்ளதா? என்பதை சம்பந்தப்பட்ட அலுவலர் அவர்களால் ஆய்வு செய்து சாலையின் நிலை குறித்த தகுதிச் சான்று பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

தனி அலுவலர், வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப் பதிவு அலுவலகத்திற்கு தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

சிறப்பு நிபந்தனை

பார்வை 7-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையாளர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை நக.எண்.12544/2014/சிபி. நாள்.04.07.2014 சிறப்பு நிபந்தனையில் "நகர் ஊரமைப்புத் துறை சட்டப் பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல".

பார்வை 8-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12201/17/சிபி, நாள்.28.09.2017-ன்படி "The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated:22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The promoter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or Part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority".

துணை இயக்குநர(பொ)/ உறுப்பினர் செயலர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
காஞ்சிபுரம்.

இணைப்பு : மனைப்பிரிவு வரைபடம் மற்றும் நிபந்தனைகள் (இரண்டு நகல்கள்)

நகல் :

1. திரு.R.அப்துல் ஹக்கீம்,
த/பெ.S.A.ரஹமதுல்லா,
எண்.28, கே.டி.எஸ் மணி தெரு,
மாமல்லன் நகர்,
காஞ்சிபுரம் - 631 502.

2. நகர் ஊரமைப்பு இயக்குநர்,
சி.எம்.டி.ஏ அலுவலக வளாகம்,
இ & சி மார்க்கெட் சாலை,
கோயம்பேடு, சென்னை – 600 092.
அவர்களுக்கு மனைப்பிரிவு வரைபடம் மற்றும் நிபந்தனைகளுடன் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

3. மாவட்ட நகர் ஊரமைப்புத் துணை இயக்குநர்,
காஞ்சிபுரம் மாவட்டம்.
மனைப்பிரிவு வரைபடம் மற்றும் நிபந்தனைகள்.

59

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)/காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் அவர்களின்
செயல்முறைகள் முன்னிலை - திரு.ஆ.வெங்கடேசன்

ந.க.எண்.4150/2021/ஆ4 நாள்: .12.2021

பொருள் - அனுமதியற்ற மனைப்பிரிவுகள் வரன்முறைப்படுத்துதல் திட்டம் 2017 - காஞ்சிபுரம் மாவட்டம் - காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் - புத்தேரி ஊராட்சி மற்றும் கிராமம் - சர்வே எண்.114-ல் பரப்பளவு 1.61 ஏக்கர் உள்ள மனைகளுக்கு மனை உட்பிரிவு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது குடியிருப்பு வீட்டுமனைபிரிவு (Lay Out) வரைபடத்திற்கு ம.வ/ந.ஊ.து.இ.(செ.ம)எண்.**19/2021** என எண்ணிடப்பட்டு அங்கீகாரம் அளித்து ஒப்புதல் பெறப்பட்டுள்ளதை தொடர்ந்து வீட்டு மனைகள் விற்பனை செய்ய இறுதி ஒப்புதல் அளித்து உத்திரவிடுதல்.

1. புத்தேரி ஊராட்சி மன்ற தீர்மானம் எண். நாள். .11.2021
2. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், காஞ்சிபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.984/2020/காஉதிகு நாள்.21.11.2020.
3. மனுதாரர் திரு. அப்துல் உறக்கீம், த/பெ.S.A.ரஉறமதுல்லா, எண்.28, கே.டி.எஸ்.மணி தெரு, மாமல்லன் நகர், காஞ்சிபுரம் மாவட்டம்- 631 502.

******

உத்தரவு :-

காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், புத்தேரி ஊராட்சி மற்றும் கிராமம் சர்வே எண்.114-ல் பரப்பளவு 1.61 ஏக்கர் உள்ள மனைகளுக்கு மனை உட்பிரிவு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது குடியிருப்பு வீட்டுமனைபிரிவு (Lay Out) வரைபடத்திற்கு ம.வ./ந.ஊ.து.இ.(செ.ம)எண்.**19/2021** என எண்ணிடப்பட்டு பெயரிடப்பட்டுள்ள குடியிருப்பு மனைபிரிவு (Lay Out) இடத்தில் மனைப்பிரிவிற்கான சாலை அமைப்பு வரைபடம் **(Road Pattern Lay Out)** பார்வை 1-ல் காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், காஞ்சிபுரம் மண்டலம் அவர்களின் கடிதத்தில் சாலை அமைப்பு வரைபடத்தில் தெரிவித்துள்ளவாறு சாலைகள் மற்றும் பூங்கா ஆகிய இடங்கள் ஊராட்சியின் பெயரில் பத்திர பதிவு செய்யப்பட்டு தான பத்திரம் எண்.4293/2021 பெறப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து பார்வை 3-ல் காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், காஞ்சிபுரம் மண்டலம் அவர்களின் கடிதத்தில் தொழில் நுட்ப ஒப்புதல் (Technical Santion) வழங்கப்பட்ட இம்மனைபிரிவு வரைபடத்திற்கு காஉதிகு எண்.**17/2021** என எண்ணிடப்பட்டு அங்கீகாரம் அளிக்கபட்டுள்ளதாலும், மனைப்பிரிவின் பரப்பிற்கு கிராம ஊராட்சி வளர்ச்சி கட்டணமாக ரூ.48,000/-(நாற்பத்து எட்டாயிரம் மட்டும்) பல்வகை இரசீது எண்.2316 நாள்.25.11.2021-ன்படி பெறப்பட்டுள்ளதாலும், மனைப்பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மனைகள் எண்ணிக்கை 38 மனைகள் விற்பனை செய்ய கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு புத்தேரி கிராம ஊராட்சியின் இறுதி ஒப்புதல் அளித்து உத்திரவிடப்படுகிறது.

//நிபந்தனைகள்//

- நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என கண்டறியபட்டால் (அ) மனைபிரிவிற்கு ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைபிரிவிற்கு வழங்கப்பட்ட இறுதி ஒப்புதல் ரத்து செய்யப்படும்.

- சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், மனுதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம்.இதனை முடிவு செய்ய கிராம ஊராட்சி பொருத்தமான அமைப்பு அல்ல.

- நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம் அவர்களின் கடித ந.க.எண்.984/2020/கா.மா.3 நாள்.11.10.2021-ல் தெரிவித்துள்ள மனைப்பிரிவு நிபந்தனைகள் தவறாது மனுதாரர் பின்பற்றவேண்டும்.

- இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்படவேண்டும்.

- நகர் ஊரமைப்பு துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள் சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்புத் துறையின் முன் ஒப்புதல் இன்றி செய்தல் கூடாது.

- தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவு வரைபடத்தினை பொதுமக்கள் பார்வைக்கு சம்மந்தப்பட்ட இடத்தில் 6 அடி X 4 அடி அளவுக்கு குறையாமல் கான்கிரீட் பலகையில் வரைந்து வைக்கப்படவேண்டும்.

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம்.

30/11/2021

பெறுநர்

திரு. அப்துல் உறக்கீம், த/பெ.S.A.ரஉறமதுல்லா,
எண்.28, கே.டி.எஸ்.மணி தெரு,
மாமல்லன் நகர்,
காஞ்சிபுரம் மாவட்டம்- 631 502.

நகல் - நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

நகல் - சார்பதிவாளர், தாமல் அவர்களுக்கு மனைகள் பத்திர பதிவு செய்யும் பொருட்டு அனுப்பப்படுகிறது.



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate